**கூடுதல் சார்பு நீதிமன்றம், பொன்னேரி**
**எம்.சி.ஓ.பி.எண் 728/2016**
**நாள் 08/04/2026 புதன்கிழமை**

இந்நீதிமன்ற எழுத்தரால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு மனுதாரர் தரப்பின் 2–வது சாட்சியின் வாக்குமூலம் 1878ம் ஆண்டில் 10–வது சட்டத்தின் வரைமுறைகளுக்கு உட்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் – ஜெகதீஷ்வரய்யா (PW2) | த/பெயர் – சேகர் |
| வயது – | தொழில் – |
| விலாசம் – | |

**முதல் விசாரணை–**

நான் இந்த மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன். இவ்வழக்கு குறித்த விவரங்கள் அனைத்தும் பிரமான வாக்குமூலத்தின் வாயிலாக கூறியுள்ளேன். ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

1. எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை எதுவும் வந்ததா என்றால் இல்லை. 2ம் மனுதாரர் அழைத்ததன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரிதான். விபத்து எப்போது நடந்தது என்றால் 16.01.2016 தேதியன்று நடந்தது. விபத்து சமயத்தில் நான் எங்கு இருந்தேன் என்றால் சிமெண்ட் கடையில் வேலையில் இருந்தேன், விபத்து எங்கள் கடைக்கு முன்னர் தான் நடந்தது. மேற்படி கடையில் நான் வேலை பார்த்தேன் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

2. விபத்து சம்மந்தமாக குற்றவியல் நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை. எந்த வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் பைக் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இருக்கவில்லை என்றும் 2ம் மனுதாரர் கேட்டுக்கொண்டதற்காக அவருக்கு இழப்பீடு பெற்றுத்தரவேண்டும் என்ற எண்ணத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் அவர் கூறியவாறே என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டு கையொப்பம் / கைரேகை பெறப்பட்டது.

**கூடுதல் சார்பு நீதிபதி**
**பொன்னேரி**